# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டமானது 2008 அக்டோபர் திங்கள் 3 –ஆம் நாள் (03.10.2008) காலை 11.00 மணிக்கு நடைபெற்றது.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

<u>பொருள் எண் : 1</u>

குளச்சல் நகராட்சியில் சுனாமி திட்டத்தின் கீழ் A.V.M.சானலையொட்டி வடிகால் ஓடை அமைக்கப்பட்டு வருகிறது. இதில் ஒரு கட்டமாக சைமன்காலனி பாலம் முதல் கடற்கரை வரையிலும் ஓடை அமைக்கப்படவுள்ளது. மேற்கண்ட இடத்திற்கு ஓடை அமைப்பதற்கு கடை எண்.37/1, வீட்டு எண்.15/36A ஆகிய கட்டிடங்களையும் நகராட்சிக்கு சொந்தமான கழிப்பிடம் எண்.1–ல் உள்ள சுற்றுச்சுவர் மற்றும் கழிப்பிடம் எண்.2–ல் உள்ள செப்டிக் டேங்க் ஆகியவறறையும் இடித்து மாற்ற வேண்டியதாயுள்ளது. மேற்கண்ட இடங்கள் நகர் மன்றத்தலைவர், உதவி செயற்பொறியாளர் மற்றும் நகராட்சி பொறியாளருடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நகர் மன்றத்தலைவர் அவர்களால் மேற்கண்ட கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்துவதற்கும் கழிப்பிடம் எண்.1–ல் சுற்றுச் சுவர் கட்டுவதற்கும் கழிப்பிடம் 2–ல் செப்டிக் டேங்க் புதிதாக கட்டுவதற்கும் மதிப்பீடு தயார் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டதன் பேரில் மேற்கண்ட பணிகள் அனைத்தும் செய்வதற்கும் இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.1,80,000/–ற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகறிது.

<u>அ.கு :</u> மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 672 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 2</u>

குளச்சல் நகராட்சி 10–வது வார்டில் உள்ள துறைமுகத்தெருவில் வீட்டு எண்.17/26 முதல் 17/22 வரையில் கழிவு நீர் ஓடை கட்டி மூடி அமைத்து தரும்படி 10வது வார்டு நகர் மன்ற உறுப்பினரின் கோரிக்கையின்படி இந்நகர் மன்றம் தனது தீர்மான எண்.671 நாள்.23.9.2008 மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன்படி தளம் ஆய்வு மேற்கொண்டு மேற்கண்ட பகுதியில் ஓடை கட்டி சிமெண்ட் தளம் அமைப்பதற்கு ரூ.25,000/–ற்கு மதிப்பீடு தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அ.கு :</u> மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 673 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2008 அக்டோபர் திங்கள் 31 –ாம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்றது.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

<u>23.09.2008–ல் நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள்</u>

இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஆகஸ்ட் 2008–ம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு.

<u>அ.குறிப்பு :</u> மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 674 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 1</u>

இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் செப்டம்பர் 2008–ம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு.

<u>அ.குறிப்பு :</u> மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 675 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 2</u>

இந்நகராட்சியில் 01.09.2008 முதல் 29.09.2008 முடிய செலவு செய்யப்பட்ட கீழ்க்கண்ட செலவினச் சீட்டுகள் மன்றத்தின் பார்வைக்கு.

(1) பொது நிதி : செலவுச்சீட்டு எண்கள் : 270, 272, 273, 274, 275, 276, 277, 280, 282, 283, 288, 290, 291, 293, 294, 296, 297, 299, 300, 301, 302, 303, 304, 308, 307, 308, 309, 310, 311, 312, 318, 314, 315, 316, 317, 318, 319, 320

<u>அ.குறிப்பு :</u> மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 676 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 3</u>

குளச்சல் நகராட்சி கதவு எண். 20/58பி1 எண் கொண்ட கட்டிடத்தில் வழங்கப்பட்ட குடிநீர் குழாய் இணைப்பு 2004–ல் வரி பாக்கி நிலுவையில் இருந்ததால் குடிநீர் குழாய் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டது. தற்போது கதவு எண். 20/58பி1 –யின் உரிமையாளர் திரு.சுப்பிரமணியம் என்பவர் துண்டிக்கப்பட்ட குடிநீர் குழாய் இணைப்பை மீண்டும் வழங்க கோரி மனு செய்து உள்ளார். எனவே துண்டிக்கப்பட்ட கதவு எண். 20/58பி1 –யிலுள்ள குடிநீர் இணைப்பை மீண்டும் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு :</u> மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 677 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 4</u>

இந்நகராட்சி மினி லாறி T.N. 74-Z-2339–க்கு தகுதி சான்று பெறுவதற்கும், அதில் உள்ள சில பகுதுகள் சரி செய்வதற்கும், இதற்கான உத்தேச செலவினம் ரூ. 17,000/–க்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு :</u> மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 678 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 5</u>

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண்.379/04/பி3 நாள் 29.09.2008–ல் வீட்டு உபயோகத்திற்கான குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை (சேவைக் கட்டணம்) ரூ.3000/– (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) என நிர்ணயம் செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. விபரம் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அ.குறிப்பு :</u> மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 679 : 6 1/2 மணி** நேர மின்தடை அமுல்படுத்தப்பட்டுள்ளதால் சீரான குடிநீர் வநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலை மேலும் சிலகாலம் நீடித்திட வாய்ப்புள்ளதால், குடிநீர் வைப்புத்தொகையினை ரூ.3000 ஆக உயர்த்தும்பட்சத்தில் மக்களிடையே அமைதியற்ற சூழ்நிலை ஏற்படும் என்று மன்றம் கருதுவதால் தற்போது வைப்புத்தொகையினை உயர்த்திட வேண்டாம் என்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

<u>**பொருள் எண். 6**</u>

குளச்சல் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளுக்கு 12 ஆழ்குழாய் கிணறுகள் மூலம் தினமும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதன் காரணமாக கீழ்க்காணும் போர்வெல்களில் மோட்டார்கள் பழுதடைந்தும், பைப் லைன்களில் ஓட்டைகள் விழுந்தும் குடிநீர் விநியோகத்தில் தடை ஏற்படுகின்றது. குடிநீர் விநியோகத்தின் அத்தியாவசியம் கருதி சம்மந்தப்பட்ட பணிகளை உடனே மேற்கொள்ளவும் வேண்டியுள்ளது.

பணி விபரம் :

(1) சீம்பிளிவிளை பகுதி போர்வெல் எண். 3–ல் பைப் ஓட்டை விழுந்து தண்ணீர் குறைவாக வெளியேற்றுகிறது.
(2) போர்வெல் எண். 12–ல் பைப் ஓட்டை விழுந்தும், மோட்டாரும் பழுதடைந்துள்ளது,
(3) வெள்ளிப்பிள்ளையார் கோவில் அருகிலுள்ள போர்வெல் எண்.6–ல் பைப் ஓட்டை விழுந்து தண்ணீர் குறைவாக வெளியேற்றுகிறது.
(4) போர்வெல் எண். 4–ல் பைப் ஓட்டை விழுந்து தண்ணீர் குறைவாக வெளியேற்றுகிறது.
(5) போர் வெல் எண். 5–ல் பைப் ஓட்டை விழுந்து மோட்டாரும் பழுதாகியுள்ளது.
(6) போர் வெல் எண். 11–ல் பைப் ஓட்டை விழுந்து டேங்கில் தண்ணீர் குறைவாக ஏறுகிறது.

மேற்கண்ட 6 எண்ணம் ஆழ்குழாய் கிணறுகளில் உள்ள 2" dia G.I. பைப்புகள் துருப்பிடித்து குடிநீர் அதன் வழியாக வெளியேறி மோட்டார் பம்ப் இயக்க முடியாமல் குடிநீர் விநியோகம் செய்வதில் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. எனவே நீண்ட காலம் உழைக்கக்கூடிய 2" P.V.C. High Tensile. பைப்புகளாக மாற்றுவதற்கும், இதற்கான உத்தேச செலவினம் ரூ. 92,000/–க்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>**அ.குறிப்பு :**</u> மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 680 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>**பொருள் எண். 7**</u>

நகர்மன்ற த் தீர்மானம் எண். 663 நாள் 23.09.2008–ல் காமராஜ் பேருந்து நிலைய எதிர்புறம் அமைந்துள்ள மூன்று துாண்களை இடித்து மாற்றுவதற்கும், இதற்கான உத்தேச செலவினம் ரூ. 15,000/–க்கும் மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது. எனவே இது தொடர்பாக 14.10.2008 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

அதன் விபரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1) திரு.T.ராதாகிருஷ்ணன்<br>ஒப்பந்தக்காரர் | . . . | 0.03% மதிப்பீட்டைவிட குறைவு<br>( ரூ. 14.757 ) |
| 2) திரு.P.ஆரோக்கியதாஸ்,<br>ஒப்பந்தக்காரர் | . . . | 3.87 % மதிப்பீட்டைவிட அதிகம்.<br>( ரூ. 15,332 ) |

இதில் திரு.T.ராதாகிருஷ்ணன் என்பவர் 0.03% மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<u>**அ.குறிப்பு**</u> : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.T.ராதாகிருஷ்ணன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 681 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>**பொருள் எண். 8**</u>

நகர்மன்ற த் தீர்மானம் எண். 641 நாள் 29.08.2008–ல் பொருளில் குறிப்பிட்டுள்ள குடிநீர் திட்டப் பணிகளை மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.42,000/–க்கும் மன்றம்

ஒப்புதலளித்ததன் அடிப்படையில் 14.10.2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.
அதன் விபரம் பின்வருமாறு :

1) திரு.C.சந்திரசேகர் ... 0.08% மதிப்பீட்டைவிட குறைவு
ஒப்பந்தக்காரர் ( ரூ. 41,542.40 )

2) திரு.P.தங்கமணி ... 3.67 % மதிப்பீட்டைவிட அதிகம்.
ஒப்பந்தக்காரர் ( ரூ. 43,101.30 )

இதில் திரு.C.சந்திரசேகர் என்பவர் 0.08% மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** :குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.C.சந்திரசேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.அ2/7722/2008)

**தீர்மானம் எண். 682 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

நகர்மன்ற த் தீர்மானம் எண். 654 நாள் 23.09.2008–ல் குளச்சல் நகராட்சி இலப்பவிளை அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தினுள் அமைந்துள்ள சத்துணவுக்கூடம் சமையலறை புதிய கட்டிடம் கட்டுவதற்கு சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 1. 00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்ட விபரம் மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது. அதனடிப்படையில் 14.10.2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.
அதன் விபரம் பின்வருமாறு :

1) திரு.P .ஜெயராஜ் ... 0.06% மதிப்பீட்டைவிட குறைவு
ஒப்பந்தக்காரர் ( ரூ. 99,293.10 )

2) திரு.P.ஆரோக்கியதாஸ், ... 5.30 % மதிப்பீட்டைவிட அதிகம்.
ஒப்பந்தக்காரர் ( ரூ. 1,04,616.00 )

இதில் திரு.P .ஜெயராஜ் என்பவர் 0.06% மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.P.ஜெயராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

( ந.க.எண். அ2/7970/2008 )

**தீர்மானம் எண். 683 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

நகர்மன்ற த் தீர்மானம் எண். 660 நாள் 23.09.2008–ல் வெள்ளியாக்குளம் கரை, ஆசாத்நகர் மற்றும் துறைமுகத்தெரு ஆகிய பகுதிகளில் புதிய குடிநீர் விநியோகக் குழாய் பதிப்பதற்கும், இதற்கான உத்தேச செலவினம் ரூ. 58,000/–க்கும் மன்றம் ஒப்புதலளித்ததன் அடிப்படையில் 14.10.2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.
அதன் விபரம் பின்வருமாறு :

1) திரு.C.சந்திரசேகர் ... 0.04% மதிப்பீட்டைவிட குறைவு
ஒப்பந்தக்காரர் ( ரூ. 56,784.75 )

2) திரு.P.தங்கமணி ... 7.24 % மதிப்பீட்டைவிட அதிகம்.
ஒப்பந்தக்காரர் ( ரூ. 60,921.00 )

இதில் திரு.C.சந்திரசேகர் என்பவர் 0.04% மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.C.சந்திரசேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.அ2/7780/2008)

**தீர்மானம் எண். 684 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

நகர்மன்ற த் தீர்மானம் எண். 655 நாள் 23.09.2008–ல் குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2008–2009 ன்கீழ் (1) குளச்சல் நகராட்சி குளச்சல் கடற்கரையில் மீனவர் ஓய்வுக்கூடம் கட்டுவதற்கு ரூ. 2.50 இலட்சம் , (2) குளச்சல் தும்பக்காட்டுவிளை பகுதியில் சிமேண்ட் தளம் அமைக்க ரூ. 2.00 இலட்சம், (3) அண்ணாசிலை சமீபம் பயணிகள் நிழலகம் கட்டுவதற்கு ரூ. 2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விபரம் மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது. அதன்பேரில் 14.10.2008 அன்று மேற்கண்ட 3 பணிகளுக்கும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் தலா இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வீதம் பெறப்பட்டன.

அதன் விபரம் பின்வருமாறு :

**(1) குளச்சல் அண்ணாசிலை சமீபம் நிழலகம் அமைத்தல் :**

1) திரு.P.ஆரோக்கியதாஸ், ஒப்பந்தக்காரர் . . . 4.17% மதிப்பீட்டைவிட அதிகம். ( ரூ. 1,99,485 .00 )

2) திரு.P .ஜெயராஜ் ஒப்பந்தக்காரர் . . . 0.09 % மதிப்பீட்டைவிட குறைவு ( ரூ. 1,91,326.50 )

**(2) தும்பக்காடுவிளை பகுதியில் சிமெண்ட் தளம் அமைத்தல் :**

1) திரு.P.ஆரோக்கியதாஸ், ஒப்பந்தக்காரர் . . . 2.22% மதிப்பீட்டைவிட அதிகம். ( ரூ. 2,03,115.00 )

2) திரு.P .ஜெயராஜ் ஒப்பந்தக்காரர் . . . 0.02 % மதிப்பீட்டைவிட குறைவு ( ரூ. 1,98,663.00 )

**(3) துறைமுகத்தெருவில் மீனவர் ஓய்வுக்கூடம் அமைத்தல் :**

1) திரு.P.ஆரோக்கியதாஸ், ஒப்பந்தக்காரர் . . . 0.07% மதிப்பீட்டைவிட குறைவு ( ரூ. 2,45,764.10 )

2) திரு.P .ஜெயராஜ் ஒப்பந்தக்காரர் . . . 3.49 % மதிப்பீட்டைவிட அதிகம் ( ரூ. 2,54,509.00 )

இதில் வரிசை எண். 1 மற்றும் 2–ல் உள்ள பணிகளுக்கு திரு.P .ஜெயராஜ் என்பவர் மதிப்பீட்டைவிட குறைவாகவும், வ.எண். 3–ல் உள்ள பணிக்கு திரு.P.ஆரோக்கியதாஸ் என்பவர் மதிப்பீட்டைவிட குறைவாகவும், ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** :குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.P.ஜெயராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியையும், வ.எண். 3–ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.P.ஆரோக்கியதாஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியையும் மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 685 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

நகர்மன்ற த் தீர்மானம் எண். 661 நாள் 23.09.2008–ல் நகராட்சி ஈப்பிற்கு 4 டயர்கள் மற்றும் ட்யூப்கள் மாற்றுவதற்கும் இதற்கான உத்தேச செலவினம் ரூ.22,000/–க்கும் ஒப்புதலளிக்கப்பட்டதின் பேரில் 14.10.2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

அதன் விபரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1 | திரு.எம். மெர்லின் ஜேக்கப்,<br>அஸ்வின் டயர்ஸ்,<br>15/88, போலீஸ் நிலையம் அருகில்,<br>பேலஸ் ரோடு, தக்கலை. | ரூ. 20,500/– |
| 2 | திரு.எ. பாபு, | ரூ. 20,800/– |

| | | |
|---|---|---|
| | மெஸர்ஸ் அசோக் டயர்ஸ்,<br>149, எம்.எஸ்.ரோடு, வடசேரி,<br>நாகர்கோவில் | |

இதில் திரு.எம். மெர்லின் ஜேக்கப், அஸ்வின் டயர்ஸ், தக்கலை என்பவர் ரூ.20,500/—க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்கள். விபரம் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எம். மெர்லின் ஜேக்கப். அஸ்வின் டயர்ஸ், தக்கலை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 686 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

குளச்சல் நகராட்சி மன்றத்தலைவர் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்

குளச்சல் நகராட்சி பெருந்தலைவர் காமராசர் பேருந்து நிலையத்தின் முகப்பு பகுதி காலியிடத்தில் பெருந்தலைவர் காமராசரின் முழு உருவ வெண்கலச் சிலையினை பொதுமக்களின் உதவியோடு அரசு அனுமதி பெற்று நிறுவிட மன்றம் தீர்மானிக்கலாம்.

**அ.குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மானம் எண்.687** :

(1) பேருந்து நிலையத்தில் Location குறிப்பிடப்படாமல் காமராசர் சிலை அமைப்பதற்கான 31.03.2003 நாளைய 425 —ாம் எண் தீர்மானமும், பேருந்து நிலையத்தில் Location குறிப்பிடப்படாமல் M.G.R. சிலை அமைப்பதற்கான 30.05.2003—ம் நாளைய 477—ாம் எண் தீர்மானமும் ரத்து செய்திட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

(2).அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

(3) பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள காலியிடத்தில் பெருந்தலைவர் காமராசர் சிலை அமையவிருக்கும் Location வரையறுக்கப்பட்ட இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்துக்கும் ஒப்புதல் அளித்திட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண். 14**

குளச்சல் நகராட்சி மன்றத்தலைவர் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்

(1) தமிழ்நாடு முழுவதும் தொடர் மின்தடை அமுலில் இருப்பதால் இரவு நேரங்களில் பள்ளிக்குழந்தைகள் படிப்பதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே அனைவரும் பயன்பெறும் வகையில் இன்வெர்ட்டர் சாதனங்களை 50% மானிய விலையில் பொதுமக்களுக்கு வழங்கிட தமிழக அரசைக் கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

**அ.குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மானம் எண். 688 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15**

குளச்சல் நகராட்சி மன்றத்தலைவர் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்

(1) குளச்சல் காந்தி ஜங்சனில் வாகனப்போக்கு வரத்தினை சீர் செய்யும் விதமாக ஒரு ரவுண்டானா அமைத்து போக்குவரத்தினை சீர்படுத்த சம்மந்தப்பட்ட மாவட்ட அதிகாரிகளை வலியுறுத்திட மன்றம் தீர்மானிக்கலாம்.

**அ.குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மானம் எண். 689 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16**

குளச்சல் நகராட்சி மன்றத்தலைவர் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்

குளச்சல் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் 15 ஆழ்குழாய் கிணறுகள் வெள்ளிப்பிள்ளையார் கோவில், பாலத்தன்கரை மற்றும் பர்னட்டிவிளை பகுதிகளில் அமைந்துள்ளன. இந்த ஆழ்குழாய் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள நீர்மூழ்கி மின்மோட்டார்களுக்கு மேற்படி பகுதிகளில் அமைந்துள்ள மின்மாற்றிகள் மூலமாக மின்சாரம் வினியோகம் செய்யப்படுகிறது. மின்தடை காலங்களில் மேற்படி

மின்மாற்றிகளில் இருந்து மின்சார விநியோகம் தடைபடும் போது குடிநீர் விநியோகம் முற்றிலும் தடைபடுகிறது. எனவே மேற்படி பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 3 மின்மாற்றிகளுக்கு தடையில்லா மின்சாரம் வழங்கிட ஏதுவாக தனி மின் பாதை அமைத்து ( Separate feeder line ) தர தமிழ்நாடு மின்சார வாரியத்தினை கேட்டிட மன்றம் தீர்மானிக்கலாம்.

**அ.குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மானம் எண். 690 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17**

குளச்சல் நகராட்சி மன்றத்தலைவர் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்

குளச்சல் நகராட்சியின் அனைத்து வார்டுகளுக்கும் 15 போர்வெல்கள் மூலம் 10 குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கும் குடிநீர் ஏற்றப்பட்டு நகராட்சியின் அனைத்து பகுதிகளுக்குமாக தினமும் 22 1/2 லட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது அரசால் அறிவிக்கப்பட்டுள்ள மின்தடை காரணமாக தினமும் 6 1/2 மணிநேரம் மின் தடையும், மாலை 6 முதல் 9 மணி வரை மின் அழுத்தக் குறைவும் இருக்கின்ற காரணத்தால் தினமும் 9 மணி நேரம் மோட்டார்கள் இயக்க முடியாத சூழ்நிலை உள்ளது. இதன் காரணமாக குடிநீர் விநியோகம் மிகப் பெரிய அளவில் பாதிப்படைவதால் பொது மக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். இந்த நிலை சில காலம் தொடர்ந்து நீடிக்கும் வாய்ப்பு உள்ளது. என்பதால் நிரந்தர தீர்வாக மின்தடை நேரங்களில் அனைத்து மோட்டார்களையும் ஜெனரேட்டர் மூலம் இயக்கவும், ஜெனரேட்டர் வாங்குவதற்கான தொகையினை மானியமாக விடுவிக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் மூலமாக தமிழக அரசைக் கேட்டுக் கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

**அ.குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மானம் எண். 691 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி.

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2008 அக்டோபர் திங்கள் 31 –ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்றது

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**பொருள் எண் : 1**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 23529/2008/பி2 நாள் 25.02.2008–ல் 2008–2009–ம் நிதியாண்டிற்கு 12–வது நிதிக்குழு பரிந்துரைத் திட்டத்தின் கீழ் முதல் தவணைத் தொகையாக ரூ.4,80,988/– குளச்சல் நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் 50% தொகை அதாவது ரூ. 2,40,494/– திடக்கழிவு மேலாண்மை திட்ட செயலாக்கத்திற்கும், 25% தொகை அதாவது ரூ. 1,20,247/– சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் ஓடை பராமரிப்பதற்கும், 25% தொகை அதாவது ரூ. 1,20,247/– மின்கட்டணம் மற்றும் டேட்டா பேஸ் உருவாக்கங்கள் தொடர்பான பணிகளுக்கு மட்டுமே செலவிடப்பட வேண்டும் எனவும், குறிப்பிட்ட அலகிற்கான பணிகளை வேறு அலகுகளில் மாற்றம் செய்யக் கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

அ.குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 692 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

குளச்சல் நகராட்சிக்குச் சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரிச்சந்தை வளாகத்தில் அமைந்துள்ள கலைஞர் கருணாநிதி வணிக வளாகத்திலும், கவியரசு கண்ணதாசன் வணிக வளாகத்திலும் கடைகளை வாடகைக்கு எடுத்துள்ள கீழ்க்கண்ட குத்தகைதாரர்கள் கீழ்க்கண்ட விபரப்படியான பாக்கி வைத்துள்ளார்கள். இது தொடர்பாக அறிவிப்புகள் அனுப்பியும், நேரில் பலமுறை அறிவுறுத்தியும் வாடகை பாக்கியினை செலுத்த முன்வரவில்லை. விபரம் மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| வ.எண். | கடை எண் | குத்தகைதாரர் பெயர் | வாடகை பாக்கிக்கான காலம் | செலுத்த வேண்டிய பாக்கித் தொகை |
|---|---|---|---|---|
| **கலைஞர் கருணாநிதி வணிக வளாகம்** | | | | |
| 1 | 6 | திரு.L.M.பெனிட்டோ | 2/2008 முதல் 10/2008 வரை | 2800 x 9 = 25,200/– |
| 2 | 9 | திரு.R,தேன்மொழி | 2/2008 முதல் 10/2008 வரை | 3950 x 9 = 35,550/– |
| 3 | 26 | திரு.R.தேன்மொழி | 2/2008 முதல் 10/2008 வரை | 3450 x 9 = 31,050/– |
| 4 | 28 | திரு. ஆன்றனிராஜ் | 11/2007 முதல் 10/2008 வரை | 200 x 12 = 24,000/– |
| **கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம்** | | | | |
| 5 | 32 | திரு. ஜலாலுதீன் | 2/2008 முதல் 10/2008 வரை | 1250 x 9 = 11,250/- |

அ.குறிப்பு : ஏழு நாட்களுக்குள் பாக்கித் தொகை முழுவதும் செலுத்த இறுதி அறிவிப்பு கொடுத்து அதன் பின்னரும் பாக்கித் தொகை செலுத்தாதவர்களுக்கு குத்தகை ஒப்பந்த விதிகளின்படி கடையின் உரிமத்தை ரத்து செய்து மறுஏலம் விடவும், வைப்புத் தொகையினை பறிமுதல் செய்வதுடன் கடையினுள் உள்ள பொருட்களை ஜப்தி செய்திடவும், வாடகைத் தொகை போக மீதித் தொகையினை நீதிமன்ற நடவடிக்கை மூலம் பெற்றிடவும், நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 693 :**

**<u>பொருள் எண் : 3</u>**

செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 4943/08/எம்.இ.2 நாள் 11.08.2008–ல் 2006–ம் ஆண்டில் நடைபெற்ற உள்ளாட்சி சாதாரண தேர்தல் முடிவுகள் அடஙகிய விபரத் தொகுப்பு குறுந்தகடாக (C.D.) வெளியிடப்பட்டுள்ளது எனவும், மேற்படி குறுந்தகடுகளை ரூ.500/–ற்கான வரைவோலையினை செலுத்தி பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே சம்மந்தப்பட்ட குறுந்தகடு வாங்குவதற்கும், இதற்கான செலவினம் ரூ. 500/–ற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : அவசர அவசியத்தின் பேரில் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறுந்தகடு வாங்கிய வகையில் செலவு செய்யப்பட்ட செலவினத் தொகை ரூ. 500/– னை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 694 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 4</u>**

குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர், குருந்தன்கோடு அவர்களின் கடிதம் எண். 718/2007 நாள் 08.09.2008 –ல் குளச்சல் நகராட்சிப் பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் இயங்கி வரும் சத்துணவுக் கூடங்களில் உள்ள பழுதுகளை சரி செய்து தரும்படி கோரப்பட்டுள்ளது. அதன்படி நகராட்சிப் பகுதியில் உள்ள சத்துணவு மையங்கள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பழுதுகளை சரி செய்ய கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | மரமடி -II மைய எண். 87–ல் மராமத்து பணிகள் செய்தல் மற்றும் படிக்கட்டு கட்டுதல். | ரூ. 75,000 |
| 2 | மரமடி -I மைய எண். 84–ல் படிக்கட்டு கட்டி மராமத்து பணிகள் செய்தல். | ரூ. 60,000 |
| 3 | துறைமுகத்தெரு–III மைய எண். 89–ல் படிக்கட்டு கட்டி மராமத்து பணிகள் செய்தல். | ரூ. 45,000 |
| 4 | அஞ்சாலிவிளை மைய எண். 81–ல் படிக்கட்டு கட்டி மராமத்து பணிகள் செய்தல். | ரூ. 1,10,000 |
| 5 | துறைமுகத்தெரு–II மைய எண். 86–ல் மராமத்து பணிகள் செய்தல். | ரூ. 40,000 |
| 6 | துறைமுகத்தெரு–I மைய எண். 85–ல் மராமத்து பணிகள் செய்தல்.. | ரூ. 45,000 |
| 7 | செக்காலத்தெரு மைய எண். 80–ல் சமையல் அறை மற்றும் படிக்கட்டு, கட்டி மராமத்து பணிகள் செய்தல். | ரூ. 75,000 |
| 8 | சாஸ்தங்கரை மைய எண். 79–ல் சமையல் அறை மற்றும் சுற்றுசுவர் கட்டி மராமத்து பணிகள் செய்தல். | ரூ. 1,35,000 |
| 9 | களிமார் மைய எண். 82–ல் சமையல் அறை மற்றும் சுற்றுசுவர் கட்டி மராமத்து பணிகள் செய்தல்.. | ரூ. 1,15,000 |
| | மொத்தம் | ரூ. 7,00,000 |

மேற்கண்ட பணிகணை செய்வதற்கு நகராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் மேற்கண்ட நிதியினை மாவட்ட ஆட்சியர் நிதி உதவி கோருவதற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : குளச்சல் நகராட்சியில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் இல்லை. ஆனால் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் மட்டுமே உள்ளது. குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மையங்கள் நகராட்சியின் கட்டிடங்களில் செயல்பட்டு வருகிறது. இக்கட்டிடங்க்ளுக்கு மின்இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பும் வழஙகப்பட்டுள்ளது. மின்கட்டணமும் நகராட்சியே செலுத்தி வருகிறது. மேற்காண் நிலையில் பழுதடைந்துள்ள கட்டிடங்களை பழுது நீக்கம் செய்ய நகராட்சியில் போதிய நிதி

வசதி இல்லை. எனவே மாவட்ட ஆட்சியரின் நிதி உதவி பெற்று பழுது நீக்கம் செய்யலாம். அதனுடன் புதிய மையம் அமைக்கவும் நிதி உதவி செய்யுமாறு கோரலாம். மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 695 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 5**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட நெடுஞ்சாலை ஓரமாக அமைக்கப்பட்டிருந்த டெம்போ ஸ்டான்ட் சாலை விரிவாக்கப் பணி நடைபெற்று வந்ததின் காரணமாக அதனை உடனடியாக பிரித்து மாற்றி நகராட்சியில் ஒப்படைக்க நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 22.09.2008 அன்று குறுகிய கால விலைப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு.

(1) திரு.பி. தங்கமணி, ஒப்பந்தக்காரர். – ரூ. 9,000/–

(2) திரு.ஏ.ஜெ.எம். அயர்ன் இண்டஸ்ட்ரீஸ், குளச்சல் – ரூ. 10,500/–

(3) திரு. எம். வினுகுமார் குளச்சல். – ரூ. 9,800/–

இதில் திரு.பி. தங்கமணி என்பவர் மேற்படி ஷெட்டினை பிரித்து அலுவலகத்தில் ஒப்படைப்பு செய்ய ரூ. 9,100/–க்கு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளார். விபரம் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** (1) அவசர அவசியத்தின்பேரில் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(2) அவசர அவசியத்தின் பேரில் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி. தங்கமணி என்பவரின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 696 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நெடுஞ்சாலை ஓரமாக அமைந்துள்ள டெம்போ ஸ்டான்டின் கட்டுமானப் பொருட்கள் கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ளபடி பிரித்து எடுக்கப்பட்டன. அவை

(1) A.C. Sheet Roof 18.50 x 4.80 m = 88.80 Sq.m.
(2) 200 mm Beam 2.40 x length x 7 pcs
(3) 3” dia G.I. Pipe 7 pcs x 2.40 m length
(4) 50 mm G.I. angle 6 pcs x 18.50 m length
(5) Iron angle tress 7 pcs x length x 4.80 m

சம்மந்தப்பட்ட பொருட்களின் உத்தேச மதிப்பு ரூ. 20,000/– ஆகும். மேற்படி பொருட்கள் அனைத்தும் பிரித்து எடுக்கப்பட்டு நகராட்சி வளாகத்தில் இருப்பதால் இடையூறு ஏற்படுகிறது. எனவே நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று கடந்த 06.10.2008 –ல் பொது ஏலம் விடப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஏலக் கேள்வி கேட்கப்பட்டுள்ளன. விபரம் மன்றத்தின் பார்வைக்கு.

| பொருள் விபரம் | ஏலக்கேள்வி விபரம் | | உச்ச ஏலக்கேள்வி |
|---|---|---|---|
| மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள பொருட்கள் அனைத்தும். | திரு. கனகராஜ் | – ரூ. 37,000/– | திரு. ரூபன் ( ரூ. 43,550/–) |
| | திரு.சுரேஷ் குமார் | – ஏலக்கேள்வி இல்லை. | |
| | திரு.ற்றி.இராதாகிருஷ்ணன் | – ரூ. 43,000/– | |
| | திரு.எ.அமீர் அலி | – ரூ. 43,500/– | |
| | திரு.ஜி.ராதாகிருஷ்ணன் | – ரூ. 32,000/– | |
| | திரு. ரூபன் | – ரூ. 43,550/– | |
| | திரு. அண்ணாராம் | – ரூ. 42,000/– | |
| | திரு. ஷாகுல் அமீது | – ரூ. 31,000/– | |

மேற்கண்ட பட்டியலில் திரு. ரூபன், ஈழக்காணிவிளை, குளச்சல் என்பவர் உச்ச ஏலக்கேள்வியாக ரூ. 43,550/– க்கு கேட்டுள்ளார். விபரம் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது

**அ.குறிப்பு** (1) : சாலை விரிவாக்கப் பணியினை கருத்தில் கொண்டு அவசர அவசியத்தின்பேரில் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று குறுகிய கால ஏல அறிவிப்பு வெளியிட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(2) சாலை விரிவாக்கப்‘ பணியினை கருத்தில் கொண்டு அவசர அவசியத்தின்பேரில் நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உச்ச ஏலக்கேள்வித் தொகை கேட்டுள்ள திரு. ரூபன் என்பவரின் ஏலக் கேள்வியினை ஏற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 697 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 7</u>**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் அமைந்திருக்கும் நுழைவு வாயிலில் மற்றும் உள்ளே அமைந்துள்ள வணிக வளாகங்களில் பாதுகாப்பு கருதி Ghate –கள் அமைப்பதற்கு இந்நகராட்சி ஒப்பந்ததாரரான திரு. சிவதாணுமாலையன் என்பவருக்கு 29.02.2008–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது. அதன் பிறகு பல அறிவிப்புகள் அனுப்பியும் அவர் மேற்படி பணியை தொடங்காத காரணத்தால் கறுப்பு பட்டியலில் சேர்க்கப்படும் என தெரிவித்து இறுதி அறிவிப்பும் கொடுக்கப்பட்டது. இதுவரையிலும் அவர் பணியினை தொடங்காத காரணத்தால் மேற்படி ஒப்பந்ததாரர் திரு. சிவதாணுமாலையன் என்பவரை கறுப்பு பட்டியலில் சேர்க்க நடவடிக்கை மேற்கொண்டிட மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு பலமுறை நேரில் தெரிவித்தும், இவர் நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு தரவில்லை. மேலும் இப்பணியினை இவர் செய்யாததால் புதிய கட்டிடங்களின் மேற்பகுதியில் பல தீய செயல்கள் நடைபெறுகின்றது. எனவே இவரை கறுப்பு பட்டியலில் சேர்ப்பதற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 698 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 8</u>**

குளச்சல் நகராட்சி கதவு எண். 18/9 எண் கொண்ட கட்டிடத்தில் வழங்கப்பட்ட குடிநீர் இணைப்பு வரி பாக்கி நிலுவையில் இருந்ததால் நிரந்தரமாக துண்டிப்பு செய்யப்பட்டு மன்றத் தீர்மானம் எண். 510 நாள் 31.03.2008–ன்படி குடிநீர் இணைப்பு ரத்து செய்யப்பட்டது. மனுதாரர் நிலுவையில் இருந்த வரி பாக்கித் தொகை முழுவதையும் செலுத்தி உள்ளார். எனவே கதவு எண். 18/9 லுள்ள குடிநீர் இணைப்பை மீண்டும் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 699 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 9</u>**

அரசாணை (எ) எண். 632இ ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள் 26.10.2007–ல் நவம்பர் மாதம் 1–ம் தேதியை தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அனைத்து ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சிகளிலும் “உள்ளாட்சி தின விழா” ஆக கொண்டாட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பேரில் உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள் குறித்த சுவரொட்டிகள், விளம்பர பலகைகள் நிறுவுதல், அரசு நலத்திட்ட உதவிகள் ஆகியவற்றின் விவரத்தினை பொதுமக்களுக்கு அறிவித்தல், விழிப்புணர்வு பேரணிகள், கருத்தரங்கங்கள், மக்கள் குறை தீர்க்கும் நிகழ்ச்சிகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்து நடத்துதல் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான கட்டிடங்களை புதுப்பித்தல், பள்ளி மாணவ மாணவியருக்கு உள்ளாட்சி நிர்வாகம் குறித்த பேச்சுப் போட்டி, பொது அறிவு போட்டி ஆகியவற்றை நடத்தவும் ஏற்பாடுகள் செய்திடவும், இதற்கான செலவினங்களை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இது சம்மந்தமான உத்தேச செலவினம் ரூ. 15,000/–க்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 700 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 10</u>**

**குளச்சல் நகராட்சி மன்றத்தலைவர் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்**

2004 சுனாமி பேரழிவிற்கு பின்பு குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சைமன்காலனி பாலம் அருகில் அமைந்துள்ள வார்டு எண்கள் 13 மற்றும் 14 ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள குடியிருப்பு வீடுகள்

அனைத்திற்கும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் கழிப்பிடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதால் மேற்படி பகுதிகளையொட்டி அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான பொதுக் கழிப்பிடங்கள் எண்கள் 3, 4, 5 ஆகியவை பொதுமக்களால் பயன்படுத்தப்படாமல் வீணாகி வருகின்றது. இதனால் சம்மந்தப்பட்ட பகுதிகளில் சுகாதார சீர்கேடும் உருவாகின்றது. எனவே பொதுமக்களின் சுகாதார நலன் கருதி பயன்பாட்டில் இல்லாத கழிப்பிட எண்கள் 3, 4, 5 ஆகியவற்றை இடித்து அப்புறப்படுத்த மன்றம் தீர்மானிக்கலாம்.

**<u>அ.குறிப்பு</u>** : பழுதடைந்து உபயோகமற்ற நிலையில் உள்ள கழிப்பிட எண்கள் 3, 4, 5 ஆகியவற்றை இடித்து அப்புறப்படுத்தவும் அதனால் ஏற்படும் காலியிடங்களில் பூங்கா போன்ற மக்களுக்கு பயன்படும் நிலையில் செய்து கொள்ளவும், மேலும் அந்த இடத்தில் கழிவுநீர் வெளியேற்றும் நிலையம் அமைக்கவும் மற்றும் சம்மந்தப்பட்ட பகுதி முழுவதையும் சுற்றி கம்பி வேலி அமைக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 701 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 11</u>

<u>குளச்சல் நகராட்சி மன்றத்தின் 21–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் கொண்டுவரும் தீர்மானம்.</u>

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட காவடிவிளைப் பகுதியில் குளத்தங்கரை அருகில் உள்ள கழிப்பிடமானது 1986 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும். தற்போது அமனை சுற்றியுள்ள பகுதியில் அமைந்திருக்கும் அனைத்து வீடுகளிலும் கழிப்பிட வசதி உள்ளது. இதனால் மேற்படி கழிப்பிடம் உபயோகமற்ற நிலையில் பழுதடைந்தும் உள்ளது. ஆகவே சுகாதார சீர்கேட்டினை கருதி மேற்படி கழிப்பிடத்தினை சம்மந்தப்பட்ட பகுதியிலிருந்து அப்புறப்படுத்துவதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

**அ.குறிப்பு** : மேற்படி இடத்தில் நடை பாதை பூங்கா அல்லது சாலை விஸ்தரிப்பு போன்ற பணிகளை மேற்கொள்ளலாம். ஆகவே முதற்கட்டமாக கழிப்பிடத்தினை அகற்றலாம். மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 702 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 12</u>

குளச்சல் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2008–2009–ன்கீழ் அண்ணாசிலை அருகிலுள்ள பேருந்து நிறுத்தத்தில் நிழற்கூடம் அமைக்க ரூ. 2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு 14.10.2008–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. இந்நிலையில் பணி நடைபெறவுள்ள இடம் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் நகர்மன்றத் தலைவரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது அண்ணாசிலை பேருந்து நிறுத்தத்தில் ஏற்கெனவே பழுதடைந்த நிலையில் காணப்படும் பழைய நிழற்கூடத்தினை இடித்து அப்புறப்படுத்தி விட்டு அந்த இடத்தில் புதிய நிழற்கூடம் அமைக்க அறிவுறுத்தப்பட்டது. அதன்படி அதனை இடித்து அப்புறப்படுத்துவதற்கு ரூ. 3,100/–க்கு மதிப்பீடு தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும் புதிய நிழற்கூடம் விரைவில் செய்து முடிக்க வேண்டியுள்ளதால் பழையவற்றை இடித்து அப்புறப்படுத்துவதற்கு நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் மூலம் மதிப்பீட்டு விலை விகிதத்தில் பணியினை மேற்கொள்வதற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 703 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி